Fachhochschule Nordwestschweiz
Pädagogische Hochschule

# வெளிப்புற பள்ளி மதிப்பீட்டின் ஒரு பகுதியாக பெற்றோர்களின் கணக்கெடுப்புக்கான அறிவுறுத்தல்கள்

அன்பார்ந்த ஐயா / அம்மா,

கல்வி, கலாச்சார மற்றும் விளையாட்டுத் துறையின் சார்பாக, சோலோதுர்ன் கண்டோனில் உள்ள ஒவ்வொரு பள்ளியும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புற மதிப்பீடு செய்யப்படும். பள்ளிகள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறதா என்பதை வெளிப்புற பள்ளி மதிப்பீடு கண்காணித்து, பள்ளிகள் அவற்றின் வளர்ச்சி நிலை குறித்த பின்னூட்டத்தைப் பெறும்.

**மதிப்பீட்டு அணி ஒரு கேள்வித்தொகுப்பு வாயிலாக எழுத்துவழியாகவும், குழு நேர்காணல்கள் வாயிலாக வாய்மொழியாகவும்** பெற்றோர்களிடம் கணக்கெடுப்பை மேற்கொள்ளும்:

a) <u>**பெற்றோர்களின் எழுத்துவழிக் கணக்கெடுப்பு (கேள்வித்தொகுப்பு)**</u>

- சாத்தியமெனில், தயவுசெய்து கேள்வித்தொகுப்பை **ஆன்லைனில்** பூர்த்தி செய்யவும். இது திறமையான பகுப்பாய்வை அநாமதேயமான முறையில் பெற உதவுகிறது. நீங்கள் இதைச் செய்வதற்கு விரும்பாவிட்டால் அல்லது முடியாவிட்டால், தயவுசெய்து அச்சிட்ட **கேள்வித்தொகுப்பைப்** பயன்படுத்தவும்.
- உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், நீங்கள் விரும்பினால் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கேள்வித்தொகுப்பை நீங்கள் பூர்த்தி செய்யலாம்.

| **ஆன்லைன் கருத்துக்கணிப்பு (கணினிகள், டேப்லட்கள் மற்றும் ஸ்மார்ட்ஃபோன்களுக்கு)** | **அச்சிட்ட கருத்துக்கணிப்பு** |
|---|---|
| • இந்தக் கருத்துக்கணிப்பு **12 மொழிகளில்** முடிக்கப்படும்.<br>• அச்சிட்ட கேள்வித்தொகுப்பில் அச்சிடப்பட்டுள்ள **இணையதள முகவரிக்குச்** சென்று, “TAN /கடவுச்சொல்” என்ற புலத்தில் உங்களுடைய **அணுகல் குறியீட்டை** உள்ளிடவும்.<br>• **கேள்விகளுக்குப் பதிலளித்த** பின்னர் “**அனுப்பு**” என்பதை கிளிக் செய்வதன் மூலம் கேள்வித்தொகுப்பை இறுதி செய்யவும்.<br>• அச்சிட்ட கேள்வித்தொகுப்பை அப்புறப்படுத்துங்கள். | • கேள்வித்தொகுப்பை முடிப்பதற்கு தயவுசெய்து ஒரு **மெல்லிய, அடர் நிறமுள்ள பேனாவைப்** பயன்படுத்தவும்.<br>• முடித்த கேள்வித்தொகுப்பை மடிக்காத, முத்திரையிட்ட உறையில் வைத்து, அதில் உங்களுடைய பெயரை எழுதாமல் உங்களுடைய மகனிடம் / மகளிடம் பள்ளிக்குக் கொடுத்தனுப்புமாறு நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்வோம்.<br>• ஆசிரியர் அந்த முத்திரையிட்ட உறைகளைப் பெற்று அவற்றைத் திறக்காமல் மதிப்பீட்டு அணிக்கு அனுப்பி வைப்பார். |

Fachstelle Externe Schulevaluation FHNW
Bahnhofstrasse 6 6.2D10
5210 Windisch
T +41 56 202 71 40
ife.schulqualitaet.ph@fhnw.ch
www.fhnw.ch

b) **<u>பெற்றோர்களின் வாய்மொழிக் கணக்கெடுப்பு (பெற்றோர்களிடம் குழுக்களாக நேர்காணல் நடத்துதல்)</u>**

கேள்வித்தொகுப்பு கணக்கெடுப்புக்கு மாற்றாக பெற்றோர்களிடம் வாய்மொழி நேர்காணல்கள் மேற்கொள்ளப்படும். பெற்றோர்களின் கருத்துக்களை ஆழ்ந்து தெரிந்துகொள்வதற்கும், எழுத்துவழிக் கணக்கெடுப்பின் முடிவுகளை சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவுவதற்கும் இவை உதவும். எனவே ஒரு நேர்காணலின் போது போதிய எண்ணிக்கையிலான பெற்றோர்கள் கலந்துகொள்வது முக்கியமாகும். எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பதிவுப் படிவத்தைப் பயன்படுத்தி குழு நேர்காணல்களில் ஒன்றுக்கு விண்ணப்பிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களுடைய ஒத்துழைப்புக்கு நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

பள்ளி மதிப்பீட்டுக்கான சிறப்புத் துறை, PH FHNW

Fachstelle Externe Schulevaluation FHNW
Bahnhofstrasse 6 6.2D10
5210 Windisch
T +41 56 202 71 40
ife.schulqualitaet.ph@fhnw.ch
www.fhnw.ch